கோரிக்கை		ரூபாய் ஆயிரத்தில்		
		வருவாய்	மூலதனம்	கடன்
47	இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)	27,22	—	—
48	போக்குவரத்துத் துறை	49,76	694,38,85	206,52,48
49	இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை	2,60,18	—	—
50	ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	1	—	—
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	220,08,51	—	—
52	மாற்றுத் திறனாளிகள் நலத் துறை	7	1	—
54	வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)	42,62,63	39,98,39	16,72,00
	பெருமொத்தம்	3,887,76,32	1,642,17,61	551,41,72

முற்பகல் 11–50

8. அரசினர் தீர்மானங்கள்

(அ) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் முன்மொழியப்பெற்று வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். சட்டமன்றப் பேரவை விதி 13 (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தள்ளி வைத்தல். மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவை விதி 13, உட்பிரிவு (2)–ன்கீழ் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தைத்

2020 ஜனவரி 9] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தள்ளிவைத்து, 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் இன்று முன்மொழியப்பெற்று வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

4. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஆ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), *2019–2020*, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Article *205*, read with Clause *(3)* of Article *203*, of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation, for moving, in the Tamil Nadu Legislative Assembly, the Demands for Further Grants for the year *2019–2020*."

10. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் (இரண்டாவது), 2019–2020, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2019–2020 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*